நிலங்களை விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டார்கள். அந்த நிபந்தனைகளுக் குட்பட்டு அந்த நிலங்களை அவர்களே வைத்துக்கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

Rent for houses under Slum Clearance Board.

*603. *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the rent for the houses allotted through Slum Clearance Board has been raised from Rs. 10 to Rs. 35 per month; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அரசினால் கொடுக்கப்படுகிற வீடுகளுக்கு எந்த அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு மின்சாரம், தண்ணீர் வசதி இல்லாத வீடுகளுக்கு மாதம் 10 ரூபாய். மின்சாரம், தண்ணீர் வசதி உள்ள இடங்களுக்கு நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு 15 ரூபாய். தண்ணீர் வசதி மட்டும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு மாதம் ரூ. 12. மின்சார வசதி மட்டும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு ரூ. 13.

Sandalwood oil.

*604. *Q.*—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to set up a factory under the Public Sector to extract sandalwood oil in this State?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆரம்பிக்க ஒரு திட்டம் பரிசிலனையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: ஏற்கனவே நம் மாநிலத்தில் மைசூரைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தியாகக் கூடிய சந்தன மரத்தில் இருந்து சந்தன எண்ணெய், சோப்பு, இதர கைவினைப் பொருள்களைத் தயாரிக்க ஒரு தொழிற் சாலை அமைப்பதில் என்ன தயக்கம்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தயக்கம் இருப்பதாகச் சொல்ல வில்லை. இதன்படி ஒரு சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை 40 லட்சத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஒரு முடிவு எடுக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the best sandalwood trees are available in plenty in Hosur and Denkanikota taluks in Dharmapuri district. In Bangalore also there is one Sandalwood Factory and sandalwood are taken to Bangalore. Good condition prevails in Hosur. May I know from the Hon. Minister for Forests and Electricity whether a sandalwood factory would be located in Hosur?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நமது மாநிலத்தில் ஐந்தாறு மாவட்டங்களில்தான் சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன. உடனடியாக நம் மாநிலத்தில் ஒரு தொழிற்சாலையை ஓரிடத்தில் ஆரம்பித்த பின்னர், படிப்படியாக மற்ற இடங்களிலும் ஏற்படுத்த பரிசீலனை செய்யலாம்.

திரு. இ. ராமசாமி: கோயம்பத்தூர் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அது எந்த இடம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி இல்லை.

திரு. கு. ஆ. பொம்மன்: அமைச்சர் பதில் சொல்லும்போது கோயம் பத்தூர் மாவட்டத்தில் ஆரம்பிக்கலாம் என்று சொன்னார்கள். கோயம்பத்தூர் மாவட்டத்தில் போதிய சந்தன மரம் கிடையாது. நீலகிரி, ஜவ்வாது மலைகளில்தான் நிறைய சந்தன மரங்கள் இருக்கின்றன. ஆகவே நீலகிரியிலோ, ஜவ்வாது மலையிலோ அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நம் மாநிலத்தில் நீலகிரி மலையிலும், ஜவ்வாது மலையிலும், மற்ற இடங்களிலும் விளைகிற சந்தன மரங்கள் சத்திய மங்கலப் பகுதியில்தான் இப்போது சேர்க்கப்படுகின்றன. ஆகவே சத்திய மங்கலத்தில் ஆரம்பிக்கலாம் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அது முடிந்த முடிவல்ல. பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: நம் மாநிலத்தில் விளைகிற சந்தன மரங்களில் 80 சதவிகிதம் ஜவ்வாது மலையில்தான் விளைகிறதைப் பார்க்கிறோம். ஆகவே இந்தப் பகுதியில் குறிப்பாக ஆலங்குளம், வாணியம்பாடியில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கூடாது. (சிரிப்பு.)

திரு. எம். ஏ. லத்தீப் : ஆரம்பிப்பார்களா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : ஜவ்வாது மலை வாசனைத் திரவியங்கள் நிறைந்தது. நமது மாநிலத்தில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் வசதி உள்ள இடங்களில் இதுவும் ஒன்று, இது நியாயமான கோரிக்கை என்பதை உணர்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை : சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டில் அதிகமான சந்தன மரங்கள் இருக்கின்றன. ஆகவே சேலம் மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது நம் மாநிலத்தில் எல்லா மாநிலங்களிலும் விளைகிற சந்தன மரங்களை ஒன்று சேர்த்தாலும் ஒரு தொழிற் சாலை ஏற்படுத்தத்தான் போதுமானதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

திரு. கா. காளிமுத்து : மேற்கு முகவைப் பகுதிகள், ராஜபாளையம் பகுதி ஆகியவற்றில் சந்தன மரங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நான் முன்னாலே சொன்ன பதிலையே இதற்கும் பதிலாக எடுத்துக்கொள்ளலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : இப்படித் தயாரிக்கப்படும் சந்தன எண்ணெய் எதற்குப் பயன்படும் ? சந்தன எண்ணெயைக் கொண்டு வேறு என்ன பொருள்கள் தயாரிக்க இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சந்தன எண்ணெய் தயாரிப்பதுதான் இப்போது இருக்கிறது. இதில் இருந்து சோப்பு போன்ற பொருள்கள் தயாரிக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

திரு. கோ. செபமாலை : தென்னாற்காடு மாவட்டத்தில் சந்தன மரங்கள் கிடைக்கின்றன. ஆகவே இங்கே ஒரு தொழிற்சாலை வைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எல்லாம் பரிசீலிக்கப்படவேண்டிய விஷயம்.

திரு. கு. ஆ. பொம்மன் : ஏற்கனவே நடுவட்டத்தில் நறுமணப்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை இருக்கிறது. அந்த இடத்திலேயே இந்தத் தொழிற் சாலையை வைப்பது பொருத்தமாக இருக்கும். அதை அரசு ஆலோசிக்குமா ?

1974 மார்ச் 25]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏற்கனவே ஒரு தொழிற்சாலே அந்தப் பகுதியில் இருப்பதால், இதை வேறு ஒரு மாவட்டத்தில் வைப்பதுதான் நியாயம் என்று கருதுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : இதற்காக 40 லட்சம் ஆகும், இது பரிசீலனே செய்யப்படுகிறது என்ருர்கள். பரிசீலனே செய்வதற்கு என்ன இருக்கிறது? உடனடியாக ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கக்கூடாதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : விவரங்களேச் சொல்ல வேண்டாமென்று நினேத்தேன். மத்திய சர்க்காரோடு தொடர்புகொண்டு, அவர்கள் ஏதாவது உதவி செய்யக்கூடுமா, மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் இரண்டும் சேர்ந்து ஏற்படுத்தலாமா என்பது பரிசிலிக்கப்படுகிறது. இல்லேயென்ருல் மாநில சர்க்காரே ஏற்படுத்த முடியுமா என்பது பரிசீலனேயில் இருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : சந்தன எண்ணெய் தயாரித்து சோப்புகளே தயாரிக்கவும், மேலும் பல கைவினேப் பொருள்களே மைசூர் மாநிலம் போலத் தயாரிக்கவும் ஒரு தொழிற்சாலேயை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான இடம் வடாற்காடு மாவட்டம். அந்த மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்வது நியாயமான கோரிக்கை என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். ஆகவே இந்த நியாயமான கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பொருத்தமான இடங்களிலும் வடாற்காடும் ஒன்று என்பதை நான் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தங்கணிக்கோட்டா, ஓசூர், கும்முடிபூண்டி, திருப்புவனம் போன்ற பகுதிகள் பற்றி இந்த அவையில் அடிக்கடி கேள்விகள் வருகின்றன. (சிரிப்பு) இந்தப் பகுதிகளில் என்ன என்ன வேண்டும் என்பதை தனியாகவே ஒரு அதிகாரியைப்போட்டு அரசு பரிசீலனே செய்யுமா ? (சிரிப்பு.)

(விடை இல்லே.)

திரு. ஆ. பரந்தாமன் : இந்தத் தொழிற்சாலேயை மத்திய அரசின் உதவியோடு ஆரம்பிக்க முடியவில்லே என்ருல் மாநில அரசு ஜாயின்ட் செக்டாரிலாவது உடனடியாக ஏற்படுத்த முன்வருவார்களா

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மத்திய அரசு உதவ முன்வரவில்லே என்ருல் மாநில சர்க்காரே ஆரம்பிக்க முடிவு செய்யலாம்.